අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# குடியியற் கல்வி

## வினாத்தாள் I & II



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது All Rights Resered

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 62 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

**குடியியற் கல்வி - I, II** | **நேரம் : 3 மணித்தியாலம்**

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

1. சனநாயக ஆட்சி முறை என்பது.
   (1) மன்னராட்சி (2) மக்களாட்சி (3) சர்வாதிகாரஆட்சி (4) பிரபுத்துவ ஆட்சி

2. இலங்கையில் மாகாணசபைகள் உருவாக்கப்பட்ட சட்டமாக கருதக்கூடியது.
   (1) 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பாராளுமன்ற கட்டளைச் சட்டம்
   (2) 1965 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க பாராளுமன்ற கட்டளைச் சட்டம்
   (3) 1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க பாராளுமன்ற கட்டளைச் சட்டம்
   (4) 1978 ஆம் ஆண்டு 154 ஆம் இலக்க பாராளுமன்ற கட்டளைச்சட்டம்

3. உள்ளூராட்சி மன்றமொன்றின் கொள்கை உருவாக்கம் செய்யும் அலகாக காணப்படுவது.
   (1) மாநகரசபை (2) நகரசபை (3) பிரதேசசபை (4) பொதுச்சபை

4. இலஞ்ச, ஊழல் அற்ற ஆட்சி முறையுடன் தொடர்புபடக்கூடியது.
   (1) நல்லாட்சி (2) ஒற்றையாட்சி (3) சமஷ்டிஆட்சி (4) அரசாட்சி

5. நிலையான அபிவிருத்தியின் அடிப்படைக் கொள்கை பற்றி கருத்துக்களை வெளியிட்டவர்.
   (1) ஜீ.டி.எச்.கோல் (2) அரிஸ்ரோட்டில் (3) சேச்ஸ் (4) சீலர்

6. உலகில் சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் நாடுகளில் ஒன்று.
   (1) ஆஜன்ரீனா (2) சோமாலியா (3) பங்களாதேஷ் (4) இந்தோனேசியா

7. இலங்கையில் வாக்குரிமை பெறும் வயதாக காணப்படுவது.
   (1) 16 வயது (2) 17 வயது (3) 18 வயது (4) 21 வயது

8. நவீன தேசிய அரசுடன் தொடர்பான எண்ணக்கருவாக அமைவது.
   (1) எழுதப்பட்ட அரசியல் யாப்பினை கொண்டிருக்க வேண்டும்
   (2) ஆள்புல எல்லகைளைக் கொண்டிருக்க வேண்டும்
   (3) பன்மைச் சமூகத்திற்கு ஒர் அரசு
   (4) ஒரு சமூகத்திற்கு ஒரு அரசு

9. பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பாக மனித வலுவை அதிகம் பயன்படுத்தும் நுட்பம்.
   (1) உழைப்பு நுட்பம் (2) விநியோக நுட்பம்
   (3) முதலீட்டு நுட்பம் (4) கொள்வனவு நுட்பம்

10. மோதல் தீர்வுச் செயன்முறைக்காக நீதி அமைச்சினால் உருவாக்கப்பட்ட சட்டரீதியான நிறுவனம்.
(1) பிரதேச செயலகம் (2) இணக்கசபை
(3) மனித உரிமைகள் ஆணைக்குழு (4) கிராம அலுவலர் அலுவலகம்

11. கி.பி 15 ஆம் நூற்றாண்டின் பின்பு ஐரோப்பாவில் முதலில் தோன்றிய தேசிய அரசு.
(1) ஜேர்மனி (2) இத்தாலி (3) பிரான்ஸ் (4) சுவிட்சர்லாந்து

12. அதிகாரப்பகிர்வு எவ்வகையான நாடுகளில் காணப்படுகின்றது.
(1) ஒற்றையாட்சி (2) சமஷ்டி ஆட்சி
(3) பாராளுமன்ற ஆட்சி (4) சனாதிபதி ஆட்சி

13. உலகமயமாதலின் பண்புகளில் உள்ளடங்காதது.
(1) வேலையுலகு மட்டுப்படுத்தப்படல்
(2) உலகில் எந்தவொரு நாட்டிலும் வாழ முடிதல்
(3) உலக ரீதியான சந்தை விரிவடைதல்
(4) குறைந்த செலவில் தொழிலாளரை பெற முடிதல்

14. நிரல் - I இல் உற்பத்திக் காரணிகளும் நிரல் - II இல் அவற்றுக்கான கொடுப்பனவுகளும் தரப்பட்டுள்ளன. இவற்றை இணைக்கும் போது வரும் சரியான விடைத்தொகுதி.

| | **நிரல் - I** | **நிரல் - II** |
|---|---|---|
| (1) | நிலம் | A - வட்டி |
| (2) | உழைப்பு | B - வாடகை |
| (3) | மூலதனம் | C - இலாபம் |
| (4) | முயற்சி | D - கூலி |

(1) CBAD (2) BCAD (3) DCBA (4) BDAC

15. தேசிய அரசுகளின் தோற்றத்திற்கான காரணிகளில் ஒன்றாக அமைவது.
(1) வளர்ச்சியடைந்த பொருளாதாரம்
(2) மானிய முறை வீழ்ச்சியும் முதலாளித்துவத்தின் எழிச்சியும்
(3) தேசிய ஒற்றுமை
(4) விஞ்ஞான மறுமலர்ச்சி வீழ்ச்சியடைதல்

16. அரசியல் யாப்பினைப் பாதுகாத்தல் பிரஜையொருவரின் எவ்வகையான கடமைகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(1) ஆன்மீக ரீதியான கடமை (2) சமூக ரீதியான கடமை
(3) பண்பாட்டு ரீதியான கடமை (4) சட்ட ரீதியான கடமை

17. மாகாண சபையொன்றின் நிறுவன கட்டமைப்பில் மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இணைப்பாளராக செயற்படுபவர்.
(1) ஆளுநர் (2) முதலமைச்சர் (3) சபை முதல்வர் (4) அமைச்சர்

18. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளின் பிரதான வகைகளுள் உள்ளடங்காதது.
(1) எதனை எந்தளவு உற்பத்தி செய்வது (2) எவ்வாறு உற்பத்தி செய்வது
(3) யாரால் உற்பத்தி செய்யப்படுகின்றது (4) யாருக்காக உற்பத்தி செய்வது

19. எமது நாட்டில் பின்பற்றப்படுகின்ற பொருளாதார முறையாவன.
(1) கலப்புப் பொருளாதார முறை (2) சமதர்ம பொருளாதார முறை
(3) முதாளித்துவ பொருளாதார முறை (4) சந்தைப் பொருளாதார முறை

20. மோதலின் பிரதிபலிப்பால் தனிநபர் ஒருவரில் ஏற்படும் மாற்றம் அல்லாதது.
(1) பதகளிப்பு (2) முன்கோபம் (3) பதற்றம் (4) சாந்தம்

21. பின்வரும் எந்நடவடிக்கை குற்றவியல் சட்டத்தினுள் உள்ளடங்கும்.
(1) காணிப்பிரச்சனை (2) சிறுவர் துஷ்பிரயோகம்
(3) வங்கி நடவடிக்கை (4) தேர்தல் நடவடிக்கை

22. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் எமது நாட்டில் செயற்பட்ட நிர்வாக அலகுகளில் ஒன்று.
(1) இராசரட்டை (2) தக்கின தேசம் (3) ருகுணுரட்டை (4) கோறளை

23. இலங்கையில் சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றல்லாதது.
(1) சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் தாபிக்கப்பட்டது.
(2) ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமை சமவாயத்தை புறக்கணித்தல்.
(3) 1929 தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தல்
(4) தேசிய சிறுவர் அதிகாரசபையை ஸ்தாபித்தல்

24. சர்வதேச வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் நாணய அலகுகளில் ஒன்று.
(1) டொலர் (2) இந்தியா ரூபா (3) யூரோ (4) றியால்

25. முஸ்லிம்களின் விவாகரத்து தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்காக உருவாக்கப்பட்ட நீதிமன்றம்.
(1) நீதவான் நீதிமன்றம் (2) சிவில் ராத் நீதிமன்றம்
(3) மாவட்ட நீதிமன்றம் (4) காதி நீதிமன்றம்

26. இலங்கை வரலாற்றில் அடிப்படை உரிமைகளை அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பு.
(1) 1972 முதலாம் குடியரசு யாப்பு (2) 1978 இரண்டாம் குடியரசு யாப்பு
(3) சோல்பரி யாப்பு (4) டொனமூர் யாப்பு

27. அமெரிக்க சுதந்திரப்பிரகடனம் வெளியிடப்பட்ட ஆண்டு.
(1) கி.பி 1776 (2) கி.பி 1215 (3) கி.பி 1688 (4) கி.பி 1789

28. இயற்கை வளமான காடுகளை அழிப்பதில் முன்னனி வகிக்கும் நாடுகளில் ஒன்று.
(1) கொங்கோ (2) ஐவரிகோஸ்ட் (3) அவுஸ்திரேலியா (4) பங்களாதேஷ்

29. இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு பின்னர் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு.
(1) ஐக்கி நாடுகள் சபை (UNO) (2) வோர்ஷோ (WARSW)
(3) நேட்டோ (NATO) (4) ஆசியான் (ASEAN)

30. இலங்கையில் சனாதிபதி தேர்தல் தொடர்பான வழக்குக்களை விசாரிக்கும் அதிகாரம் பெற்ற நீதிமன்றம்.
(1) மாகாண மேல் நீதிமன்றம் (2) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(3) மேல் நீதிமன்றம் (4) உயர் நீதிமன்றம்

31. 1865 இல் மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் படி முதலில் உருவாக்கப்பட்ட மாநகரசபை.
(1) குருநாகல் மாநகரசபை (2) கம்பஹா மாநகரசபை
(3) யாழ்ப்பாண மாநகரசபை (4) கொழும்பு மாநகரசபை

32. ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களை ஒழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை.
(1) யுனிசெப் (UNICEF) (2) சிடோ (CEDAW)
(3) யுனிபா (UNFPA) (4) யுனெஸ்கோ (UNESCO)

33. இலங்கையில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் தலைவராக செயற்படுபவர்.
(1) சனாதிபதி (2) உயர் நீதிமன்ற நீதிபதி
(3) சபாநாயகர் (4) பிரதம நீதியரசர்

34. இலங்கையில் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் நாயகம் (ஒம்புட்ஸ்மன்) பதவி அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு.
(1) 1972 முதலாம் குடியரசு யாப்பு (2)1978 இரண்டாம் குடியரசு யாப்பு
(3) டொனமூர் (4) சோல்பரி

35. இலங்கையில் தேர்தல் மாவட்டங்களை பிரிக்கும் பொறுப்பு எவ்வாணைக்குழுவுக்குரியது.
(1) இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு (2) தேர்தல் ஆணைக்குழு
(3) எல்லை நிர்ணய ஆணைக்குழு (4) தேசிய பொலிஸ் ஆணைக்குழு

36. இயற்கை முறையில் வளி மாசடையும் சந்தர்ப்பமாக அமையாதது.
(1) குளோரோ புளோரோ காபன் (CFC) (2) எரிமலை வெடிப்பு
(3) காட்டுத் தீ (4) புழுதிப்புயல்

37. அபிவிருத்தி அளவீட்டு முறைகளில் நவீன குறிகாட்டியாக அமைவது.
(1) பொருளாதார வளர்ச்சி வேகம் (2) இணையத்தள பயன்பாடு
(3) தேறிய மொத்த தேசிய உற்பத்தி (4) மொத்த தேசிய உற்பத்தி

38. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை.
(1) 15 பேர் (2) 16 பேர் (3) 17 பேர் (4)19 பேர்

39. பொதுநலவாய அமைப்பின் தலைவராக செயற்படுபவர்.
(1) பிரித்தானிய பிரதமர் (2) ஐ.நா செயலாளர் நாயகம்
(3) அமெரிக்க சனாதிபதி (4) பிரித்தானிய முடி

40. பின்வரும் கூற்றுக்களில் பாராளுமன்ற அரசாங்க முறைக்கு பொருத்தமான கூற்றுக்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.
A - நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு நேரடியாக பொறுப்புக் கூறவேண்டிய அவசியம் இல்லை
B - சட்டத்துறையால் நிறைவேற்றுத்துறையை பதவி விலக்க முடியும்
C - இரு நிறைவேற்றுப் பிரிவுகளைக் கொண்டிருக்கும்
D - நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு நேரடியாக பொறுப்புக்கூற வேண்டிய அவசியம் இல்லை
E - பாராளுமன்றுக்கு கூட்டாக பொறுப்புக்கூறல் அவசியமாகும்

(1) BED (2) CBD (3) BCE (4) CDE

(1 X 40 = 40 புள்ளிகள்)

**

முழுப் பதிப்புரிமையுடையது All Rights Resered

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு**

| 62 | T | I, II |
|---|---|---|

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

**குடியியற் கல்வி - I, II**

**குடியியற் கல்வி - II**

**அறிவுறுத்தல்கள்**

* **முதலாம்** வினா கட்டாயமானது
* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

01.

(I) இலங்கையின் தேர்தல் தொகுதிகளை பிரிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படும் **இரண்டு** அளவீட்டு நியதிகளும் எவை.

(II) சுவிட்ஸர்லாந்தின் சட்டமன்றமான **சமஷ்டிப்** பேரவையின் **இரு** சபைகளையும் குறிப்பிடுக.

(III) நல்லாட்சி காணப்படும் நாடு ஒன்றின் பொருளாதாரப் பண்புகள் **இரண்டு** தருக.

(IV) உற்பத்தி ஒன்றின்போது பயன்படுத்தக் கூடிய **இரு** நுட்ப முறைகளும் யாவை.

(V) சர்வதேச மோதல்களின் **இரு** வகைகளும் எவை.

(VI) இலங்கையின் நீதித்துறை சுதந்திரத்ததை பேனுவதற்கு அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள கொள்கைகள் **இரண்டு** தருக

(VII) *1931* டொனமூர் அரசியல் யாப்பின் முக்கிய அம்சங்கள் **இரண்டு** தருக.

(VIII) இலங்கையில் தொழிலாளர் உரிமைகளை பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டங்கள் **இரண்டு** தருக.

(IX) சூழல் தொகுதியில் உள்ளடங்கியுள்ள கூறுகள் **இரண்டு** தருக.

(X) சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் **இரண்டு** நாடுகளை குறிப்பிடுக.

(02 X 10 = 20 புள்ளிகள்)

2.

"அனைவரது உரிமைகளையும் பெற்றுக்கொள்ளும் ஆட்சி சனநாயகமாகும்"

(I) அரசின் அடிப்படை கூறுகள் **இரண்டு** தருக. *(2 புள்ளிகள்)*

(II) தேசிய அரசின் தோற்றத்துக்கு பங்களிப்பு செய்த சிந்தனையாளர்கள் **மூவரின்** பெயரை குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

(III) (a) சனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு அவசியமான காரணிகள் **மூன்றை** குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

(b) மேலே (a) குறிப்பிட்டப்பட்ட பண்புகளில் **ஒன்றை** விளக்குக.

*(2 புள்ளிகள்)*

3. "அனைத்து பிரஜைகளையும் உள்ளடக்கிய மாபெரும் நிறுவனம் அரசு"

(I) ஒற்றையாட்சி அரசின் நன்மைகள் **இரண்டு** தருக. (2புள்ளிகள்)

(II) சுவிட்சர்லாந்து **சமஷ்டியில்** கென்ரன்களுக்குரிய அதிகாரங்கள் **மூன்று** தருக? (3 புள்ளிகள்)

(III) (a) சமஸ்டி அரசொன்றின் பண்புகள் **மூன்று** தருக? (3 புள்ளிகள்)

(b) மேலே (a) குறிப்பிட்டப்பட்ட பண்புகளில் **ஒன்றை** விளக்குக. (2 புள்ளிகள்)

4. மனதளவில் சமாதானத்தை உருவாக்குதல் மூலம் மோதல் நிலையை குறைக்கவோ அல்லது தீர்க்கவோ முடியும்.

(I) உள்ளக மோதல்களின் **இரண்டு** வகைகள் எவை. (2புள்ளிகள்)

(II) மோதல் ஏற்படுவதற்குரிய அடிப்படை காரணங்கள் **மூன்றை** குறிப்பிடுக (3 புள்ளிகள்)

(III) (a) மோதல் தீர்வு செயன்முறையில் பேரம் பேசும் முறையின் பண்புகள் **மூன்றை** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட பண்புகளில் **ஒன்றை** விளக்குக. (2 புள்ளிகள்)

5. மனித நடத்தைகளை செம்மைப்படுத்தும் விதிகளின் தொகுப்பு சட்டமாகும்.

(I) இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் நீதிமன்ற மாவட்டமாக செயற்பட்ட **இரண்டு** மாவட்டங்களை குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(II) சர்வதேச சட்டங்களுக்கு **மூன்று** உதாரணங்கள் தருக. (3 புள்ளிகள்)

(III) (a) அடிப்படை மனித உரிமைகள் மீறப்படும் போது பிரஜை ஒருவர் முறைப்பாடு செய்து தீர்வினை பெற்றுக்கொள்ளக்கூடிய அமைப்புகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிடப்பட்டுள்ள அமைப்புக்களின் செயற்பாடுகளில் **ஒன்றை** விளக்குக. (2 புள்ளிகள்)

6. மனிதனால் புவி பல்வேறுபட்ட அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுப்பதனால் சமகாலத்தில் சூழல் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்

(I) சூழலில் இருந்து எமக்கு கிடைக்கும் சேவைகள் **இரண்டினை** குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(II) நீர் மாசடையும் சந்தர்பங்கள் **மூன்றினை** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(III) (a) சூழல் தொடர்பாக பிரஜைகளின் பொறுப்புகள் **மூன்றினை** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் குறிப்பிடப்பட்ட பிரஜைகளின் பொறுப்புக்களில் **ஒன்றை** விளக்குக. (2 புள்ளிகள்)

7. சர்வதேச உறவுகள் இன்று பல்வேறு நோக்கங்களை இலக்காக கொண்டு அமைந்துள்ளன.

(I) சர்வதேச உறவுகள் இடம்பெறும் **இரு** முறைகளும் எவை. *(2புள்ளிகள்)*

(II) சர்வதேச உறவுகள் வளர்ச்சியடைவதில் தாக்கம் செலுத்திய **மூன்று** முக்கிய அம்சங்களை குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

(III) (a) ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் **மூன்றினை** குறிப்பிடுக

*(3 புள்ளிகள்)*

(b) மேலே (a) இல் குறிப்பிட்ட நோக்கங்களில் **ஒன்றை** விளக்குக.

*(2 புள்ளிகள்)*

***